### தமிழ்நாட்டில் பதவி ஏற்ற மூன்றே மாதங்களில்

# ரூ.20,881கோடி கடன் வாங்கிய த.வெ.க. அரசு!

## கடன் தொகைக்கு என்ன பதில் சொல்லப்போகிறார் முதல்வர்?

சென்னை, ஜீலை 28-

தமிழ்நாட்டில் பதவியேற்ற மூன்று மாதங்களில் த.வெ.க. அரசு பல்வேறு திட்டங்களுக்காக, 20 ஆயிரத்து 881 கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளது. தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாததற்கு முந்தைய அரசு கடன் வாங்கியதை காரணம் காட்டிய விஜய், தற்போது வாங்கியுள்ள கடன் தொகைக்கு என்னப் பதில் சொல்லப்போகிறார் என கேள்வி எழுந்துள்ளது.

தமிழக அரசுக்கு, மாநில சரக்கு மற்றும்சேவைவரி, முத்திரைத்தாள் மற்றும் பதிவு கட்டணம், விற்பனை மற்றும் வர்த்தகம் மீதான வரி என, பல வகையில் வருவாய் கிடைக்கிறது. அரசு பணியாளர்கள் சம்பளம், ஓய்வூதியம், கடனுக்கான வட்டி போன்றவற்றுக்காக செலவு செய்யப்படுகிறது. வரவை விட, செலவு அதிகம் இருப்பதால், கடன் பத்திரங்கள் விற்பனை, வங்கிகள் போன்றவற்றில் கடன்கள் வாங்கப்படுகின்றன. இவற்றில், கடன் பத்திரங்கள் விற்பனை வாயிலாக பெறப்படும் கடன்தான் அதிகம்.

இவ்வாறு வாங்கப்படும் கடன்களில், சாலை அமைத்தல், பாலம் கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பு பணிகளை, அரசு மேற்கொள்கிறது. இந்த நோக்கங்களுக்காகவே முந்தைய தி.மு.க. அரசு கடன் வாங்கியது.

இந்நிலையில், நடப்பு நிதியாண்டில், ஏப்ரல் முதல் ஜீன் வரையிலான மூன்று மாதங்களில், 20 ஆயிரத்து 881 கோடி ரூபாய் கடன் த.வெ.க. ஆட்சியில் வாங்கப்பட்டுள்ளது. இந்த முழு ஆண்டில், 1.22 லட்சம் கோடி ரூபாய் கடன் வாங்க திட்டமிடப்பட்டு உள்ளது.

தமிழக அரசின் மொத்த கடன், ஏற்கனவே 10 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது. மக்கள் நலத் திட்டங்களுக்காக முந்தைய அரசு கடன் வாங்கியிருந்ததை விஜய் விமர்சித்திருந்தார். இப்போது ரூ. 20 ஆயிரத்து 881 கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளதற்கு த.வெ.க. அரசு என்னை விளக்கம் சொல்லப் போகிறார்கள் என்று மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

# கோயம்பேடு மார்க்கெட்டில் அடிப்படை வசதிகளின்றி வியாபாரிகள்- மக்கள் அவதி!

சென்னை, ஜுலை 28-

கோயம்பேடு மார்க் கெட்டில் போதுமான பாது காப்பு மற்றும் அடிப்படை வசதிகளின்றி வியாபாரிகள், பொது மக்கள் அவதி அடைந்து வருகின்றனர். மேலும், கள்ளச் சந்தையில் மது விற்பனை அதிகரித்து வருவ தாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆசியாவி லேயே மிகப்பெரிய சந்தை யான கோயம்பேடு மார்க் கெட்டில் சுமார் 5,000க்கும் மேற்பட்ட கடை கள் அமைக்கப்பட்டு வியாபா ரம் நடைபெற்று வருகிறது. இங்கு காய், கனி, மலர் மற்றும் மளிகை என தனித்தனி கடைகள் அமைத்து வியாபா ரம் நடத்தப்பட்டு வருகிறது. இங்கு நாள்தோறும் ஒரு லட்சத்திற்கும் மேலான பொதுமக்கள் மட்டுமின்றி, சென்னை புறநகர் பகுதி களிலிருந்து வியாபாரிகளும் இங்கு வந்து தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கி விட்டு செல்வது வழக்கம்.

கோயம்பேடு மார்க் கெட்டில் பணிபுரியும் தொழி லாளர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பலர் வேலை முடிந்தவுடன் அங்கு சென்று மது அருந்து வது வழக்கமாக ஒன்றாக உள்ளது. இரவு நேரங்களில் குறிப்பாக கடை அடைக்கப்பட்ட பிறகு கள்ளச் சந்தைகளில் மது விற்பனை பெருமளவில் நடை பெறுவதாகவும். இது தொட ர்பாக சி.எம்.டி.ஏ மற்றும் கோயம்பேடு சரக காவல்துறை அதிகாரி களுக்கு, பொது மக்கள் மற்றும் வியா பாரிகள் புகார் கொடுத்தும் வருகின்ற னர்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய கோயம்பேடு சந்தை யின் நிர்வாகம், மக்களின் மற்றும் வியாபாரி களின் குறைகளையும் கேட்டறிந்து போர்க்கால அடிப்படையில், அடிப்படை வசதிகளை ஏற்ப டுத்தி தீர்வு காண வேண்டும் என்பதே வியாபாரிகள் மற்றும் பொதுமக்களும் கோரிக்கையாக உள்ளது.

### முத்தமிழறிஞர்!

# கலைஞரின் தமிழ் கரம் பிடித்து எழுதப் பழகியவர்களில் நானும் ஒருவன்!

## மேனாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேச்சு!

அரியலூர், ஜீலை 28–

அரியலூரில் அறம் செய் நண்பர்கள் சங்கம் சார்பில் துவங்கப்பட்டுள்ள அகரச் சுவடி பதிப்பகம் துவக்க விழாவில் மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர், எஸ்.எஸ். சிவசங்கர் பங்கேற்று அகர சுவடி இலச்சினையையும், 'நிழல் தேடும் சூரியன்' மற்றும் மடல் விடு தூது எனும் இருபது எழுத்தாளர்களின் கடித தொகுப்பையும் நூல்களாக வெளியிட்டார்.



இந்த நிகழ்வில் திரைப்பட பாடல் ஆசிரியரும், கவிஞருமான அறிவுமதி பங்கேற்றார். பின்னர் உரையாற்றிய எஸ்.எஸ்.சிவசங்கர்,

தற்போது youtube திறந்தாலே தமிழ்நாடு மாறி போச்சு எனும் விளம்பரம் ஒன்று ஓடிக் கொண்டிருக்கிறது. அது ஒரு நகைக்கடை விளம்பரம். தமிழ்நாடு மாத்திரமல்ல, உலகமே இது போன்ற புத்தக வெளியீட்டு நிகழ்வுகளுக்கு நேரமில்லாமல், தொடுதிரை அலைபேசியில் ஒரு முப்பது செகண்ட் ரிலீஸ் பார்ப்பதற்கு கூட நேரமில்லாமல், அதையும் அவசரமாக அவசரமாக தள்ளி அதை பார்த்து பொழுது போக்கக்கூடிய ஒரு மனநிலை இன்று வந்திருக்கிறது.

அதிலேயே உலகை தெரிந்து கொள்வதற்கு முனைந்து, அதிலேயே கருத்துக்களை பகிர்ந்து கொள்வதற்கு முனைந்து, அதிலேயே முடிவெடுத்து செயல்படுகின்ற ஒரு காலமாக இருக்கின்ற இந்த நேரத்தில், இந்த ஒரு இலக்கியம் சார்ந்த நிகழ்ச்சியை அதுவும் பதிப்பக துவக்க விழாவில் நூல் வெளியீட்டு விழாவாகவும் ஏற்பாடு செய்திருக்கின்ற தைரியம் வேண்டுமென்றால் அது அறம் செய் நண்பர்கள் சங்கத்தினரால்தான் முடியும்.

தமிழ்நாடு மாறவில்லை. தமிழ்நாடு மாத்திரமல்ல, உலகமே இன்னும் இலக்கிய ஆர்வத்தில் இருந்து மாறவில்லை என்பதற்கு உதாரணமாக நாங்கள் ஆர்வத்தோடு இருக்கிறோம் என இந்த நிகழ்வில் பெருந்திரளாக பங்கேற்றுள்ள பார்வையாளர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்று டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி கூட இன்றைய இளைஞர்கள் நாங்கள் இன்னும் கருத்திலே ஆழமாக நிற்கிறோம். கொள்கையில் ஆழமாக நிற்கிறோம் என எல்லாவற்றையும் தாண்டி, ஒரு வெற்றியை பெற்றிருப்பது மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

கடிதம் என்பது வெறுமனே கடிதம் மாத்திரமல்ல. அது கடித இலக்கியம். நம்முடைய இந்திய சுதந்திரத்திற்கு பாடுபட்ட முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு சிறையில் இருந்தபோது, தன்னுடைய மகள் இந்திரா காந்திக்கு கடிதம் எழுதுகிறார் அது ஒரு பெரிய கடித இலக்கியமாக வந்திருக்கிறது.

அதேபோல தமிழ்நாட்டு அரசியலை பாமரர்களின் கைகளில் கொண்டுவந்து சேர்த்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா தன்னுடைய தோழர்களுக்கு எழுதிய கடிதத்தை 'தம்பிக்கு கடிதமாக' எழுதியவர்.

அதேபோல முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன்னுடைய வாழ்நாள் எல்லாம் ஒவ்வொரு நாளும் தன்னுடைய அனுபவத்தை, அரசியல் நிகழ்வை, பொது விஷயங்களை எல்லாவற்றையும் கடிதமாக வடித்தவர். 'உடன்பிறப்பே வா' என்ற அந்தக் கடிதத்தை படித்துதான், தமிழிலே அவர் விரல் பிடித்து நடந்த காரணத்தினால் தான் எழுதக் கூடிய எண்ணத்தையும், வாய்ப்பையும் நான் பெற்றேன்.

இப்படி கடித இலக்கியத்திற்கென தமிழில் ஒரு சிறப்பான மரபு உண்டு. ஆனால் இன்று அது மறைந்து விட்டது.

அரியலூரில் துவங்கப்பட்டுள்ள அகரச்சுவடி பதிப்பகத்தின் முதல் புத்தக வெளியீட்டில் மடல் விடு தூது எனும் தலைப்பில் சுமார் 20 எழுத்தாளர்களை கடிதம் எழுத செய்து, அதை தொகுத்து புத்தகமாக வெளியிட்டுள்ளனர். ஒவ்வொருவரின் அனுபவமும், உணர்வும் இந்தக் கடிதத்தின் வாயிலாக வெளிப்படுகிறது.

நம்முடைய மண்ணில் எவ்வளவு எழுத்தாளர்கள் நிரம்பி இருக்கிறார்கள் என்கின்ற அந்தச் செய்தி, இந்த நூல் மூலம் வெளிப்படுகிறது எல்லோருக்குமான வாசல் திறந்து விடப் பட்டால் எல்லோரும் பிரகாசிப்பார்கள் என்பதற்கு இந்த நூல் மிகச் சிறந்த எளிதாக வெளிக்கொண்டு வந்துள்ளது.

நிழல் தேடும் சூரியன் எனும் தலைப்பில் வெளியாகியுள்ள மற்றொரு நூலும் அவசியம் படிக்க வேண்டிய ஒன்று. இதை எழுதியிருக்க கூடிய தோழர்கள் இன்னும் தொடர்ந்து எழுத வேண்டும். அவரவர்கள் தனது தந்தை தாய், தன்னை பற்றி எழுதினாலே அது ஒரு நூலாகிவிடும். ஒவ்வொன்றும் ஒரு அனுபவங்கள். ஒரு மனிதனின் வாழ்க்கை போல், இன்னொரு மனிதனின் வாழ்க்கை அமைவதில்லை.

ஏதோ ஒரு விதத்தில் எல்லோருக்கும் சிறு வித்தியாசம் இருக்கும். அந்த வித்தியாசத்தை எழுத்து வடிவில் பதிவு செய்வது என்பதுதான் எழுத்து. அந்த எழுத்து வடிவம், தமிழை உயிர்ப்பிக்கும். இந்த அவசர உலகில் இந்த தமிழ் சார்ந்த இலக்கிய நூல்கள் இவைதான் நம்மை உயிரோடு வைத்திருக்கக் கூடியவை.

ஒரு கூட்டம் சென்னையில் இருந்து கொண்டு அவர்கள் எழுதுவது மாத்திரம் தான் இலக்கியம் என சொல்லிக் கொண்டிருப்பர். புளிச்ச மாவு வாங்கியதைக் கூட ஒரு இலக்கியமாக எழுதுவார்கள். அவர்களே பத்திரிகையில் வெளியிட்டு பெருமை சேர்த்துக் கொள்வார்கள். ஆனால் எட்டு கோடி மக்கள் இருக்கின்ற தமிழகத்தில் இந்த மண்ணில் ஒவ்வொரு பகுதியிலும் அந்த மண்ணின் இலக்கியம் பிழைந்து இருக்கிறது. ஆகவே வெளியே எடுத்து வரப்பட வேண்டும் என உரையாற்றினார்.

### ஒன்றிய கல்வி அமைச்சர் ராஜினாமா செய்த சம்பவம் போராட்டக்காரர்களுக்கு கிடைத்த வெற்றி!

# சட்டமன்றம் சினிமா கொட்டகையாக மாறி உள்ளது!

## கரூர் சம்பவத்தை பார்த்து அழாத த.வெ.க.வினர் சினிமாவை பார்த்து அழுகின்றனர்!

### நெல்லையில் – சிறையில் உள்ள மார்க்கண்டேயன் எம்,எல்,ஏ,வை சந்தித்தபின் முன்னாள் சட்ட அமைச்சர் ரகுபதி எம்,எல்,ஏ,பேட்டி!

நெல்லை,ஜுலை 28-

தமிழக முதலமைச்சர் குறித்து அவதூறாகப் பேசியதாகப் பதிவு செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப் பட்டு, பாளையங் கோட்டை மத்திய சிறை யில் அடைக்கப் பட்டுள்ள விளாத்திகுளம் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனை,தி. மு.க முன்னாள் சட்டத் துறை அமைச்சர் ரகுபதி நேரில் சந் தித்துப் பேசினார்..

முன்னதாக ஏற்கனவே கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் மற்றும் கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என். நேரு எம்.எல்.ஏ. ஆகியோர் பாளை மத்திய சிறைக்கு சென்று மார்க்கண் டேயன் எம்.எல்.ஏ.வை சந் தித்து நலம் விசாரித்தார்கள்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (25 ம் தேதி) முன் னாள் அமைச்சர் ரகுபதியும் சிறைக்கு வந்தார்.சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக இந்தச் சந்திப்பு நீடித்தது. வரும் ஜுலை 27ஆம் தேதி மார்க்கண்டேயனின் ஜாமீன் மனு உயர் நீதி மன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ள நிலையில்,அது தொடர்பாக இருவரும் தீவிர ஆலோசனை நடத்தியதாகத் தெரிகிறது.

சந்திப்பிற்குப் பிறகு பின்னர் பாளையங் கோட்டை சிறை வாசலில் செய்தியா ளர் களைச் சந்தித்த முன்னாள் அமைச்சர் ரகுபதி பேசியதாவது.



ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது 'எலும்பை முறித்து விடுவேன்' என்று கூறியது பேச்சுவாக்கில் வந்த வார்த்தை. அது குற்றமாகாது. ஆனால், டிஎஸ்பி மூலம் நீதித் துறைக்கு அழுத்தம் கொடுத்து இந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளது.

கரூர் சம்பவத்தைப் பார்த்து யாரும் கண்ணீர் விடவில்லை ஆனால் இன்று 'ஜனநாயகம்' படத்தைப் பார்த்துவிட்டு கண்ணீர் விடுகிறார்கள். நம்முடைய சட்டமன்றம் தற்போது ஒரு திரைப்படக் கொட்டகையாக மாறி யிருக்கிறது. இது மக்களைக் காப்பாற்றும் அரசு அல்ல சினிமா பார்க்கும் அரசு.

முதல்வர் பேசும்போது சட்டமன்றக் கதவுகளை மூட வேண்டும் என்று கூறு வது உரிமை மீறல் இல்லையா? கதவை மூடுவதற்கு யாருக்கு என்ன உரிமை உள்ளது? 'எலும்பை முறிப்பேன்' என்று சொன்னது மட்டும் குற்றமா, முதலமைச்சர் கதவைச் சாத்தச் சொல்வது நியாயமா? என கேள்வி எழுப்பினார்.

சபையில் சில குற்றச் சாட்டுகள் வைக்கப் படும்போது வெளி நடப்பு செய்ய சட்ட மன்ற உறுப்பி னர்களுக்கு முழு உரிமை உண்டு.ஆனால் சட்ட பேரவை தலைவர் ஒரு தலைப்பட்சமாகச் செயல்படுகிறார்.தனது கடைசி காலத்தில் கிடைத்திருக்கும் வாய்ப்பை அவர் இப்படிப் பயன்படுத்துகிறார்.

வெள்ளைக்காரன் ஆட்சியில் கூட பொது மக்களுக்கு பேசுவதற்கு உரிமை இருந்தது.

ஆனால், தற்போதைய விஜய் ஆட்சியில் பேசுவதற்கு உரிமை இல்லை. அரசை விமர்சனம் செய்தாலே வழக்கு போடும் நிலைதான் உள்ளது.தமிழகத்தில் உள்ள கோவில் நிலங்கள் சூறையாடும் ஆட்சியாக இது இருக்கிறது.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட உள்ளதற்குக் காரணம், ஆட்சியாளர்கள் பா.ஜ.க. வின் ஸ்லீப்பர் செல்லாகச் செயல்படுவதுதான். தமிழ்நாட்டு மக்களைப் பற்றி சிந்திக்க யாருக்கும் நேரமில்லை. பா.ஜ.க.வை எதிர்த்து உண்மையான அரசியல் செய்யும் ஒரே கட்சி தி.மு.க. மட்டும் தான்."

அ.தி.மு.க.மற்றும் டி.வி.கே.இணைந்து ஆட்சி அமைக்கத் திட்டமிட்டனர். அதில் தி.மு.க.வுக்குத் தொடர்பில்லை என டிடிவி தினகரன் கூறியுள்ளது குறித்த கேள்விக்கு நாங்கள் எப்போதுமே கொல்லைப்புற வழியாக ஆட்சியைப் பிடிக்க மாட்டோம்.ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது பதவியை ராஜினாமா செய்தது குறித்த செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த ரகுபதி, "நீண்ட நாட்க ளாகப் போராடி வரும் போராட்டக்காரர்களின் கோரிக்கைக்குக் கிடைத்த வெற்றி இது. அதனால்தான் அவர் தனது பதவியை ராஜினாமா செய்திருக்கிறார்" என்று தெரிவித்தார்.

இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ,முன்னாள் அமைச்சர் மைதீன்கான்,மாநில அணி நிர்வாகிகள் விஜிலா சத்யானந்த்,கணேஷ் குமார் ஆதித்தன்,நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ் உள்பட கழகத்தினர் பலர் உடன் இருந்தனர்.

### காவல் துறையின் துஷ்பிரயோகத்தால் ஒரு மாதத்தில் 4 லாக்கப் மரணங்கள்!

# முதல்வர் விஜய் இதுவரை வாய் திறக்காதது ஏன்?

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, ஜுலை 28-

காவல் துறையின் துஷ்பிரயோகத்தால் ஒரு மாதத்திலேயே 4 லாக்கப் மரணங்கள் நிகழ்ந்துள்ளது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கடுமையாக குரல் கொடுத்த முதல்வர் விஜய், இப்போது வாய் திறக்காதது ஏன்? எனறு தினகரன் நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.



தினகரன்

ஜூலை 26, 2026 ஞாயிற்றுக்கிழமை

மவுனம் உடையுமா?

'தினகரன்' நாளேடு எழுதிய தலையங்கம் வருமாறு:

முதல்வர் விஜய் பதவியேற்று 75 நாட்கள் கடந்து விட்டது. இதில் அரசின் சாதனைகள் என்ன என்பதை பட்டியலிடுவதற்கு நீண்ட நெடிய தேடுதல் அவசியம். அதே நேரத்தில் தொடரும் சர்ச்சைகளுக்கு பஞ்சமில்லை. இதில் முதலிடம் வகிப்பது, முதல்வரின் கட்டுப்பாட்டில் உள்ள காவல்துறையின் துஷ்பிரயோகத்தால் நிகழும் லாக்கப் மரணங்கள். கடந்த 13ம் தேதி, நாகர்கோயிலில் குட்கா வழக்கில் கைது செய்யப்பட்ட மாற்றுத்திறனாளி சபரிவர்மனின் லாக்கப் மரணம், மாநிலத்தையே உலுக்கியது.

இந்த அதிர்ச்சி ஓய்வதற்குள், கடந்த 23ம் தேதி தூத்துக்குடியில் சட்டவிரோதமாக மது விற்றதாக கூறி, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட 24 வயது இளைஞர் அருணாசலம், போலீசார் தாக்கியதில் இறந்துள்ளார். இதுவும் காவல்துறையின் கோர முகத்தை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. இதற்கு முன்பாக 15ம் தேதி, சென்னை புழல்சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த 45 வயது கைதி பாலாஜி உயிரிழந்துள்ளார். அதற்கும் முன்பாக 8ம் தேதி, சென்னையை சேர்ந்த 28 வயது ஓட்டுநர் வெங்கடேசன், காவல்துறையின் சித்ரவதையால் உயிரிழந்துள்ளார்.

இப்படி ஒரே மாதத்தில், மாநிலத்தையே அதிர வைத்த 4 லாக்கப் மரணங்கள் நிகழ்ந்துள்ளது. இது வரை தமிழகம் கண்டிராத ஒரு அவல நிகழ்வாகவே இது கருதப்படுகிறது. இது தொடர்பாக முன்னாள் முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் எழுப்பியுள்ள பல்வேறு கேள்விகள், மக்கள் மன்றத்தில் பேசு பொருளாகியுள்ளது. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, லாக்கப் மரணங்களை எதிர்த்து கடுமையாக குரல் கொடுத்தவர் தற்போதைய முதல்வர் விஜய். ஆனால், தனது ஆட்சியில் நடந்துள்ள இந்த நான்கு மரணங்கள் குறித்தும், இது வரை அவர் வாய் திறக்கவில்லை.

எங்கள் ஆட்சி அமைந்தால், காவல் நிலைய அத்துமீறல்கள் அறவே இருக்காது. காவல் துறை முழுமையாக சீர்திருத்தப்படும் என்று அவர் பொங்கியது, இப்போது ஏன் முடங்கி நிற்கிறது என்ற கேள்வி, அனைத்து தரப்பு மக்களின் மனதிலும் இயல்பாகவே எழுந்துள்ளது. அதே நேரத்தில், இந்த லாக்கப் மரணங்கள் தொடர்பாக, முதல்வரிடமிருந்து இதுவரை ஒரு அறிக்கை கூட வரவில்லை. முதல்வரின் இந்த மவுனம், லாக்கப் மரணத்தை விட வேதனையானது என்பது உயிரிழந்தவர்களின் உறவுகள் வெளிப்படுத்தும் உள்ளக்குமுறல்.

லாக்கப் மரணங்களை கண்டித்து ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்திய பலர், இன்று எம்எல்ஏக்களாகவும், அமைச்சர்களாகவும் சட்டமன்றத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களின் காதுகளில் கூட, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஓலக்குரல் கேட்காதது காலக்கொடுமை. இதற்கு காரணம் காட்டி, கீழ்மட்ட அதிகாரிகளை தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்படும் பழைய பார்முலாவை பின் பற்றுவதற்கு, நீங்கள் போட்ட மாற்றம் என்ற முழக்கம் தேவையே இல்லை.

அந்த மாற்றம் என்பது, லாக்கப் மரணம் தொடர்பான நடவடிக்கைளிலும் தென்பட வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக, "அதிகாரத்தின் நிழலில் நடக்கும் அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே, ஒரு முதல்வரின் உண்மையான நிர்வாகத் திறனுக்கு சான்று. தேர்தல் களத்தில் வெற்றிக்காக வாக்குறுதிகளை அள்ளி வீசுவது எளிது. அப்படி வெற்றி பெற்ற நிலையில், செயல்பாட்டில் அதை காட்ட வேண்டியது காலத்தின் அவசியம். இதை இனியேனும் கவனத்தில் வைத்து செயல்படுவாரா தமிழ்நாடு முதல்வர்? அவரது மவுனம் உடையுமா? என்பதே மக்கள் மன்றத்தின் ஒட்டு மொத்த எதிர்பார்ப்பு.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

### ஓட்டுக்காக இளைஞர்களைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டு – அதே இளைஞர்கள் உரிமைக்காகப் போராடும்போது கொச்சைப்படுத்தும்

# தரங்கெட்ட போக்கை த.வெ.க. நிறுத்திக் கொள்ள வேண்டும்!

## தி.மு.க., ஐ.டி. விங் கடும் கண்டனம்!

சென்னை, ஜீலை 28–

தி.மு.க. ஐ.டி. விங் விடுத்துள்ள வலைதளப்பதிவில், "அகங்கார தரங்கெட்ட போக்கை த.வெ.க. நிறுத்திக்கொள்ள வேண்டும்! என கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த வலைதளப்பதிவு வருமாறு:–

நீட் தேர்வுக்கு எதிராகவும், ஏழை மாணவர்களின் எதிர்காலத்திற்காகவும் களமிறங்கிப் போராடும் துணிச்சல் மிக்க இளைஞர்களைத் தரக்குறைவாக விமர்சிப்ப தும், அவமானப் படுத்துவதும்தான் தவெகவின் அரசியலா?



உரிமைக்காகப் போராடும் மாணவர்கள், பெண்களை தன் கட்சியினரை விட்டு நக்கல் அடித்து ஆபாசக் கருத்துக்களை ஏவி விடுவது எப்பேர்ப்பட்ட கேவலமான அரசியல்!

ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்த்துக் கேள்வி கேட்க முதுகெலும்பில்லாமல் பதுங்கும் இந்த 'டம்மி' அரசு, நீட்டுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் இளைஞர்களை இழிவுபடுத்துவதன் மூலம் தன் டெல்லி எஜமானர்களுக்கு விசுவாசத்தைக் காட்டுகிறதா?

ஓட்டுக்காக இளைஞர்களைக் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டு, அதே இளைஞர்கள் தங்கள் உயிர்மூச்சான உரிமைக் காகப் போராடும்போது அவர்களைக் கொச்சைப்படுத்தும் தவெகவின் இந்த அகங்கார தரங்கெட்ட போக்கை த.வெ.க. நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் – தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

### நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்யக்கோரி மாணவர்கள் போராட்டம்!

# ஆளுநர் மாளிகை நோக்கிச் சென்ற மாணவர்களை தடுத்து நிறுத்திய போலீசார்!

## மாணவர்களை குண்டுக்கட்டாக தூக்கிச் சென்று கைது !

சென்னை, ஜுலை 28-

நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையை முற்றுகையிட முயன்ற மாணவர்களை காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதால் இருதரப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட குளறுபடிகளுக்கு எதிராக டெல்லியில் மாணவர்கள் நடத்திய தொடர் போராட்டம் காரணமாக ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் நேற்று பதவி விலகினார். இதனைத் தொடர்ந்து டெல்லியில் நடைபெற்ற போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

இந்நிலையில், தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வில் இருந்து முழு விலக்கு அளிக்கக் கோரி தமிழகத்தின் பல பகுதிகளிலும் மாணவர்களின் போராட்டம் தொடர்ந்து வருகிறது. இந்நிலையில், அகில இந்திய மாணவர் பெருமன்றத்தைச் சேர்ந்த மாணவர்கள், சென்னை சைதாப்பேட்டையில் இருந்து, கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை நோக்கி பேரணியாக புறப்பட்ட னர். அப்போது, காவல் துறையினர் அவர்களை தடுத்து நிறுத்தினர். சாலைத் தடுப்புகளை தள்ளிவிட்டு மாணவர்கள் முன்னேற முயன்றனர். இதனால், இரு தரப்பினருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்யும் வரை போராட்டம் தொடரும் என முழக்கமிட்டு மாணவர்கள் முன்னேற முயன்றனர். அவர்களை காவல் துறையினர் குண்டுக் கட்டாக தூக்கிச் சென்று கைது செய்ததால் பதற்றம் ஏற்பட்டது.